“அறிவும் பெருகிப்போம்…”
ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்பருமானவருக்கு ஸ்தோத்திரம்:

“…தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு;
அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்…” (தானியேல் 12:4)
இவ்வுலகம் நவீன, விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவிலே அதிக அதிகமாக முன்னேறிக்கொண்டேயிருக்கிறது……
மற்றொரு பக்கம்….
அவ்வுலக ஆன்மீக விஷயத்தில் பலர், வேதவசனங்களை தியானித்து, தேவனுடைய மகிமையை அதிக அதிகமாக ஆராய்கிறார்கள்.
இயேசுகிறிஸ்துவின் வருகை சமீபமாக இருக்கிறது என்பதை அறிந்துவருகிற நாம் அனைவரும் ஆண்டவருடைய வருகைக்கு எதிர்பார்த்து காத்திருக்கிறோம்…

“….எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.
**தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே….”**
(1 தீமோத்தேயு 2:4-5)
நம்மைப் படைத்த தேவன் ஒருவராயிருக்க,
இவ்வுலகத்தின் நவீன விஞ்ஞானம், அரசியல், வியாபாரம், மதவாதிகள், மற்றும் பல மனிதர்களின் எண்ணங்களினால்…..
தேவன் ஒருவரே என்ற உண்மையை மக்கள் உணரமுடியாத அளவிற்கு, இவ்வுலகம் குழப்பத்திலுள்ளது….
“…இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்….”
(பிரசங்கி 7:29)
மக்கள் அநேக உபாயதந்திரங்களிருந்து விடுதலை பெறவும்….
தேசம் விடுதலை பெறவும்…. உலகம் விடுதலை பெறவும்…..
தேவனிடம் மன்றாடுவோம்.
“….நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்;
நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.
நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. (1 தீமோத்தேயு 2:1-3)
**நம்முடைய ஜெபம் விசுவாசத்தோடும், விசுவாசம் கிரியையோடும் இருக்க, கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக. ஆமென்.**